**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.362/2022 | Date | : 11.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 10 | Taluk | : |
| Name | : கார்த்திகேயன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.02.2026

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.07.2021ம் தேதி இரவு 12.10 மணிக்கு ஈரோடு தெற்கு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முருகேசன் நிலைய அலுவலில் இருந்தபோது, ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த கார்த்திகேயன் என்பவரின் இன்டிமேசனை பெற்று அங்கு சென்று விசாரிக்க குடும்பத்தினரிடம் கலந்து பேசிவிட்டு புகார் கொடுப்பதாக சொல்லிவிட்டு, பின்னர் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று நிலைய குற்ற எண். 258/2021 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324 506(i) இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து வாதியின் புகாருடன் முதல் தகவல் அறிக்கையின் அசலை இணைத்து நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

2. நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 07.07.2021ம் தேதி மதியம் 19.40 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பெருமாள், ஜார்ஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** சம்பவ இடத்தில் கிடந்த எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆலோபிளாக்கல் ஒன்றை இரவு 20.40 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சாட்சிகள் கார்த்திகேயன், சிவகாமி, சரத்குமார், சசிகலா, முருகன், ராமசாமி, பெருமாள், ஜார்ஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. சம்பவ இட விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரிகளை தேடி 08.07.2021ம் தேதி காலை 11.00 மணிக்கு கொல்லம்பாளையம், லோட்டஸ் மருத்துவமனை ரவுண்டானம் அருகே வந்தபோது, அங்கே நின்றிருந்த எதிரிகள் குணா(எ)குணசேகரன், ராஜேந்திரன், சந்திரன் மற்றும் நேரு ஆகியோரை தகவலாளி அடையாளம் காட்ட காலை 11.00 மணிக்கு கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ. 7 ஆகவும், ஒழுங்கற்ற உடைந்த நிலையில் உள்ள ஹாலோ பிளாக் கல் ஒன்று அ.த.சா.பொ. 1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

4. அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் சசிகலா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றேன். வாதிக்கு இடது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் எனவும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் எனவும், மருத்துவர் கருத்துகூறி காயச்சான்றிதழ் வழங்கி இருந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள்

294(b), 323, 324, 506(i) இதச பிரிவுகளில் இருந்து 294(b), 323, 326, 506(ii) மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு நான் புலன்விசாரணையை முடித்து 1ம் எதிரி குணா மீது இதச பிரிவுகள் 294(b), 326, 506(ii) ன் கீழும் மற்ற எதிரிகள் மீது 294(b), 323 இதச வின் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. 07.07.2021 ஆம் தேதி காயம்பட்ட நபர் வாக்குமூலம் எதுவும் கொடுக்க முன் வரவில்லை என்றால் உறவினர்களிடம் கலந்து ஆலோசித்து விட்டு கொடுப்பதாக கூறி அன்றைய தினம் வாக்குமூலம் அளிக்க முன்வரவில்லை. இந்த வழக்கின் புகார் உண்மையானது அல்ல என்றும், பின்னிட்டு வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தன்னை 07 நபர்கள் தாக்கியதாக காயம்பட்ட நபர் மருத்துவரிடம் தெரிவித்துள்ளதாக விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு நான்கு நபர்கள் தாக்கியதாக பொய்யாக புகார் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் நாள் அன்றே இரவு ஒரு புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்றும், அந்த வாக்குமூலம் ஆனது வழக்கிற்கு எதிராக இருந்ததால் அதை மறைத்து பொய்யாக இந்த வழக்கின் புகார் வாக்குமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், வைத்து சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றும், புகார்தார்கள் கொடுத்த தவறான தகவலை பின்னிட்டு கலந்து ஆலோசித்து வழக்கிற்கு ஏற்றார் போல் மாற்றி உண்மைக்கு புறம்பாக வழக்கு ஆவணங்களை உருவாக்கி எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு

**தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.02.11 17:27:50 -0800

Judicial Magistrate No.III,
Erode.